Literacy for a Billion

Movie: Gilli
Year: 2004

Song: Appadi Podu
Lyricist: P A Vijay

அப்படி போடு போடு போடு
அசத்தி போடு கண்ணாலே
இப்படி போடு போடு போடு
இழுத்து போடு கையாலே

உன்னோட ஊருக்குத்தான்
உப்புமூட்ட ஏறிக்கிறேன்
உன்னோட கண்ணப்பொத்தி
கண்ணாமூச்சி ஆடவறேன்

இந்த நடை போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா

இந்த நடை போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா

இந்த நடை போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா

அப்படி போடு போடு போடு
அசத்தி போடு கண்ணாலே
இப்படி போடு போடு போடு
இழுத்து போடு கையாலே

ஓ ஓ ஓ என் மனசுல
நீ நினைக்கறியே
ஏ அழகா என் கனவுல
நீ முழிக்கறியே
ஏ அடடா என் உதட்டுல
நீ இனிக்கிறியே
இது நிஜம் தானா
என் உசுருல நீ துடிக்கிறியே
ஏ அழகி என் வயசுல
நீ படுத்தறியே
ஏ மெதுவா என் கழுத்துல
நீ மணக்கறியே
இது அது தானா

உன்ன பார்த்த சந்தோஷத்தில்
ரெண்டு மடங்கா பூத்திருந்தேன்
உன்ன தொட்ட அச்சத்திலே
மூணு மடங்கா வேர்த்திருந்தேன்

உன்னோட கன்னங்கள
காக்க கடி நான் கடிக்க
என்னோட காது பக்கம்
செல்லக்கடி நீ கடிக்க

இந்த வயசு போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா

இந்த வயசு போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா

இந்த வயசு போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா

அப்படி போடு போடு போடு
அசத்தி போடு கண்ணாலே
மூக்குத்தி போடு போடு போடு
இழுத்து போடு கையாலே

திக்க வெக்கற தெணற
வெக்கறியே
அடி மெதுவா விக்க வெக்கற
வேர்க்க வெக்கறியே
அடி என்ன தான் வத்த வெக்கற
வதங்க வெக்கறியே
இது சரிதானா
சிக்க வெக்கற செவக்க

Literacy for a Billion

வெக்கறியே
நீ ஜோரா சொக்க வெக்கற
சுழல வெக்கறியே
நீ அழகா பத்த வெக்கற
பதற வெக்கறியே
இது முறை தானா

ஒத்த பார்வை நெஞ்சுக்குள்ள
ஊசி நூலும் கோர்க்குதடி
தெத்துப்பல்லு சிரிப்பில் எல்லாம்
பத்து நிலவு தெறிக்குதடி

தை தை னு ஆடிகிட்டு
உன்னோட நானும் வரேன்
நை நை னு பேசிக்கிட்டு
உன்னோட சேர்ந்து வரேன்

இந்த ஆட்டம் போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா

இந்த ஆட்டம் போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா
இந்த ஆட்டம் போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா

அப்படி போடு போடு போடு
அசத்தி போடு கண்ணாலே
இப்படி போடு போடு போடு
இழுத்து போடு கையாலே

உன்னோட ஊருக்குத்தான்
உப்புமூட்ட ஏறிக்கிறேன்
உன்னோட கண்ணப்பொத்தி
கண்ணாமூச்சி ஆடவறேன்

இந்த நடை போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா
இந்த நடை போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா

இந்த நடை போதுமா
இன்னும் கொஞ்சம் வேணுமா

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.